**O.S.116/2019 PW-1**

**நாள்.** 09.12.2020

**பெயர். கணேசன்**

**வா.சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் என் சகோதரர் காலமாகிவிட்டதால் அவருடைய வாரிசுகளையும் வாதி தரப்பில் சேர்த்தும் 3ம் பிரதிவாதி அவரும் காலமாகிவிட்டதால் அவருடைய வாரிசுகள் 17 முதல் 20 கூடுதல் பிரதிவாதிகளாக சேர்த்து சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வரைவாளாராக ஈரோட்டில் பணி செய்து வந்தேன். ராணிப்பேட்டை, ஈரோடு, சென்னை ஆகிய இடங்களில் பணி செய்து வந்தேன். என் பணி ஓய்வை ஈரோட்டில் நிறைவு செய்தேன். நான் பணி ஓய்வு பெற்றபின் பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்தேன். 2005ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு உரிமையில்லை என்றும் பிரதிவாதிகள் 26 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.